392

MSV20

Z, . வாகட சூத்திரம்

ஜா. வசகட சுத்திரம்.

20.11.2000 - 12.12.2000

392

346. அநுபவவைத்தியம்

மருந்து செய்முறை

[illegible]

2, வாகட சூத்திரம் அட்டவணை

1. ### காமாலைக்கு

கம்பரிசி அரைத்தமாவு
இரண்டு எலுமிச்சங்காயளவு, கீழ்க்காய்நெல்லி அரைத்த விழுது ஒரு எலுமிச்சங்காயளவு இரண்டும் சேர்த்து பிசைந்து ஒட்ட அடையாய்ச் சுட்டு தின்று நாள் மூன்று அடை சாப்பிடவும் காமாலை குணமாகும். பத்தியம் உப்பு, புளி ஆகாது

பாண்டுக்கு

கம்பரிசி அரைத்தமாவு
இரண்டு எலுமிச்சங்காயளவு அவரையிலை அரைத்த விழுது ஒரு எலுமிச்சங்காயளவு இவ்விரண்டையும் பிசைந்து ஒட்ட அடையாய்ச் சுட்டு தின்று நாள் மூன்று அடை சாப்பிடவும் பாண்டு தீரும். பத்தியம் உப்பு, புளி ஆகாது.

வாய்புண்ணுக்கு

இருகுத்து கொண்டு மணத்தினை பாடுங்கி வந்து 1/4 படி தண்ணீரில் போட்டு கொதித்து கசாயத் தெளிவாக வடிக்கின்ற மூன்றுநாள் தின்ன வாய்புண்ணு குணமாகும். பத்தியம் உப்பு, புளி ஆகாது

அண்ட வாதத்துக்கு

கோவைக்கிழங்குசாறு படி
2. ஆமணக்கு விளக்கெண்ணெய் படி நீ கிழவிருந்தும் கலந்து மூன்று நாள் கொடுக்கவும். அண்டவாதம் தீரும்.

செய்யான்கடிக்கு

மணக்கிரைவு இலையாவது பட்டையாவது இளவெந்நீரில் அரைத்து நெல்லிக் காயளவு உருட்டி 1/4 படி இளவெந்நீரில் கலக்கி 3-நாள் கொடுக்கவும். இவ்விதம் அரைத்துக்கடி வாயில் பூசவும். உப்பு, புளி ஆகாது.

வெட்டைக்கு

ஆடுதின்னாப்பாளை, ஆவரைப் முளைக்கீரை, முசுட்டை இந்த நான்கு வகையும் சமனாய் எடுத்து அரைத்து நெல்லிக்காயளவு 1/4 படி பசுவின் பாலில் மூன்று நாள் சாப்பிட வெட்டை தீரும். உப்பு, புளி ஆகாது.

எலிகடிக்கு

அவுரியையும் ஆடு தின்னாப்பாளையும் சமனாக கொண்டு அரைத்து

வெந்நீராவது பசுவின்பாலாவது அரைத்து
நெல்லிக்காய் அளவு உருட்டி வெந்நீராவது
அல்லது பாலாவது 1/4 படியில் கலக்கி மூன்று நாள்
சாப்பிடவும். இவ்விதம் அரைத்து கடிவாயில்
பூசவும். எலிகடி குணமாகும். உப்பு, புளி ஆகாது.

3. வெட்டைக்கு

கொல்லன்கோவை இலையை
பசுவின்பால் விட்டரைத்து நெல்லிக்காயளவு
பாலில் மூன்று நாள் கொடுக்கவும். குணமாகும்
பத்தியம் உப்பு, புளி ஆகாது

பேய், நரி, நாய்கடிக்கு

[illegible] இலையை பிடுங்கி
வந்து 1/4 படி கம்பங்கூழில் போட்டு இடித்து
தென்னை கதிர்க்குள்ளடி மூன்று நாள் சாப்பிடவும்
குணமாகும்.

தம்பனத்துக்கு

முருங்கைப்பூவை கசக்கி ஒரு
பணவிடை சாறு அரைக்கால் படி பசுவின்பால்
விட்டு 10 நாள் சாப்பிடவும். சுக்கிலம் தம்பிக்கும்.

நஞ்சு 18-க்கு மருந்து

அவுரிவேர் வெந்நீரில் அரைத்து
நெல்லிக்காயளவு வ-படி வெந்நீரில் கொடுக்கவும்
குணமாகும்.

உஷ்ணநீர்க் கடுப்புக்கு

சிறுநெருஞ்சி சமூலமும் உரை
வைத்து இடித்து பல்தரகாயம் மண்ணை வைத்து
கொண்டு மூன்று நாள் அளவு எடுத்து 1/4 படி
வெந்நீரில் அரைமண்டலம் சாப்பிடவும்

மேலான 4-வது குறிப்பு கிழிந்துவிட்டது
அதனால் அப்பகுதி எழுத முடியவில்லை.

5. கக ரோகத்துக்கு (காச ரோகத்துக்கு)

காசுகட்டி விராகனெடை 2
எடுத்து ஒரு எலுமிச்சம்பழத்துள்ளே பொதிந்து
7-நாள் இருக்க விட்டு எடுத்து தேன்பட பழச்சாறு
விட்டரைத்து அரைக்கால்படி பசும்பாலில் அரைத்து
5-நாள் கொடுக்கவும். குணமாகும்

(சுளுக்கு)

மிளகைத்தூள் அரைத்து
மூன்று முள்ளங்காய் அளவு சாப்பிடவும் குணமாகும்.

(தொக்குக்கு)

நாயுருவியை அவலேபோட்டு
மூக்கை அகத்துக்கு கட்டவும். நீர்க்கடுப்பு
நிற்கும்.

கடுகை அரைத்து நல்லெண்ணெயில்
போட்டு அகத்தில் தடவும்

சீதாணா இலையும் அருக்கீரை இலையும் அரைத்து பூசவும் முலைக்கடுப்பு தீரும்.

வெளிச்சிக்கு

நாவல்பட்டைத்தூள் நல்லெண்ணெயில் காய்ச்சி காதில் விட வெளிச்சி தீரும்.

பெருவயிறுக்கு

மயில் எச்சத்தை தாமரையால் — இச்சவடியில் 6-வது இலையன் காலையில்.

7. மண்டை வலிக்கு

சீயக்காய் இலையை அரைத்து கொதிக்க வைத்து நெற்றில் பூசவும். இந்த இலையை பொட்டணம் கட்டி முகர்ந்து பார்க்க தீரும். மண்டை வலி தீரும்.

சீதமும் இரத்தக்கடுப்புக்கு

சித்தகத்தியின் கருகாமல் வாட்டி எருமை மோர் விட்டரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு எடுத்து 1/4 படி எருமை மோரில் கொடுக்கவும்.

மிளகாயிலையை வதக்கி ஒ- படி எருமை மோர்விட்டு கரைத்து சுக்கு மற்ற மோரில் அரைத்து அந்த மோரில் போட்டு கொடுக்கவும்.

பொடுதலையும் கடுகும் அரைத்து ஆசனத்தில் பூச இரத்தமூலம் சீதமும் நீங்கும்.

பெரும்பாடுக்கு

கருவேல் கொழுந்து தயிர் விட்டு அரைத்து நெல்லிக்காயளவு தயிரில் கொள்ளவும்.

சிந்தூரம் ஒரு நெல்லிக்காய் அளவு தயிரில் கொள்ளவும். பெரும்பாடு தீரும்.

மாலைகண்ணுக்கு

கொடிக்கிலையாறுடைய பாலை கண்ணில் நடவ மாலைகண் தீரும்.

கொடிகிலை வாதுமை 1/4 படி கம்பாகியில் போட்டு கஞ்சி காய்ச்சி சாப்பிடவும் மாலைகண் தீரும்.

8. ## நீர்சுருக்குக்கு

அருகம்புல்லை எடுத்து ஒரு படி தண்ணீர் விட்டு நாலில் ஒன்றாய் காய்ச்சி கொடுக்கவும் நீர் சுருக்கல் நீங்கும்.

இரத்த மாறமயத்துக்கு

ஏலமும் சீரகமும் சமனாய் இடித்து தாமரை வேருடன் சாறு விட்டு அரைத்து ஒரு கொட்டை பாக்களவு உருண்டை சாப்பிடவும்.

இலவங்கம் அரைத்து சீரகம் தேய்த்து மேலும் தலைமாலையிடவும். மாலை தண்ணீர் விட்டு கொள்ளவும். இப்படி மூன்று நாள் செய்ய இரத்த மாறமயம் நீங்கும்.

குன்ம வலிக்கு

செம்முள்ளி வேரை கண்டங்கண்டமாக நறுக்கி பொடி செய்து ஒரு படி தான் கல்வத்தில் போட்டு அரைப்பது கல்லுப்பு கூடப் போட்டு மேல் மூடி சீலை மண் செய்து புடம் போடவும் இப்படி 7-நாள் புடம் போட்டு எடுத்து உப்பு இரண்டு பங்கும் ஓமம் ஒரு பங்கும் நற்சீரகம் ஒரு பங்கும் கூடப் போட்டு பொடித்து வில்திறக்காயம் பங்கை வைத்துக் கொண்டு இந்த பொடி விராகனெடை எடுத்து இரண்டு வேளையும் கொள்ளவும். பித்த வலி குன்மம் சகல குன்மம் தீரும்.

வயிற்றில் செத்த பிள்ளை விழ

உளா (உள்ளி) இலையை இள வெந்நீர் விட்டு இடித்து 1/4 படி சாறு உள்ளுக்கு கொடுக்கவும். வயிற்றில் செத்த பிள்ளை விழும்.

9\. அரசம் பட்டையை காடி விட்டு இடித்து அரைத்து 1/4 படி சாறு கொடுக்கவும் செத்த பிள்ளை விழும்.

எலாமுருங்கை பொடி செய்து நல்லெண்ணெயில் குழப்பி கொடுக்கவும். பிள்ளை விழும்

கண் பூவுக்கு அரண்ட கண்ணுக்கு

கீழ்ச்சோற இலையை தண்ணீர் விட்டு இடித்து பொட்டணம் கட்டி கண்ணில் பாய்ச்சிய கண் நோய் தீரும்.

தினை தண்டை உடைய இலைப்
பாலில் அரைத்து கண்ணில் படவும் கண் நோய் தீரும்

கோவைவேரைப் பூவை இலைப்பால்
விட்டு நசுக்கி கண்ணில் பிழிய கண் பூவு தீரும்

வேப்பங் கொழுந்து சிறுகீரைவேரும்
பொன்னாங்காணி வேரும் இம்மூன்று அரைத்து ஒரு நெல்லிக்காய் அளவு இரண்டுபடி ஆவின்பாலில் போட்டு காய்ச்சி உறக்கித்தி கடைந்து அதை தலையில் விட்டு தலை முழுகவும் கண் நோய் தீரும்.

சிரன்னிக்கு

மூசானை கருந்துளசி இலையை
அரைத்து வெள்ளாட்டு நெய்யில் ½ படியில் போட்டு வேகவைத்து உள்ளுக்கு காதிடை கொடுத்து மேலும் துவாரையடையும் சிரன்னியுந் தீரும்.

மூலத்துக்கு

காயம் பொடி பண்ணி
அரைக்கால்படி வெந்நீரில் மலவாடை மசிய போட்டு கொள்ளவும். வில்வமாவது பழமாவது தின்று கொள்ளவும் மூலம் தீரும்.

10. குடல்வாதத்துக்கு

பாகிபயறு ஆவாரம்பிஞ்
சுட்டு அரைத்து நெல்லிக்காய் அளவு ¼ படி பாலில் கலக்கி கொடுக்கவும். குடல் வாதமும் தீரும்.

பிட்டத்துக்கு

அரசம் பொருந்தை ஆவரை
பாலில் நெல்லிக்காயளவு அரைத்து பாலில் கொடுக்கவும்.
பிளந்த கைகால் பிட்டத்திலும்

முசுட்டை இலையும் கட்டுக்
கொடி இலையும் அரைத்து இளவெந்நீரில் கொடுக்க

விக்கலுக்கு

தாய்ப்பாலும் தேனு மத்திக்கக்
கொடுக்க விக்கல் நிற்கும்

தேள்நட்டுவக்காலிக்கு

மிளகும் விதையை எருக்கம்
பிசின் உடனரைத்து கடிவாயில் பூசவும். தேள் நட்டுவ
கால் குணமாகும்

சுரத்துக்கு

துளசி மிளகுச்சாறு ஊட்டு
21 - நாளும் அரைத்து வில்லிருக்க காயம் மண்ணி உலர்த்தி
வைத்துக் கொண்டு அவரை வெண்ணையில் பணவிடை
பொடி உட்டுக் கொள்ளவும் சுரம் குணமாகும்.

குளிர் சுரத்துக்கு

வெள்ளைப் பாசாணம் சாதி
லிங்கம் சிவன் கட்டை முலைப்பாலில் அரைத்து சிறு
பயறு அளவு உருண்டை செய்து உலர்த்தி வைத்துக்
கொண்டு அந்த வேளையில் ஒரு உருண்டை கொடுக்கவும்
பத்தியம் மோரும் சாதமும் உண்ணவும் குளிர்சுரம் தீர்
போகும்.

11. மந்தத்துக்கு

வீசம்படி பாசிப்பயறு உடைத்து அரைப்படி தண்ணீரில் போட்டு ஊறவைத்து அந்த தண்ணீரையே இறுத்துக் கொண்டு சர்க்கரையும் பசுஞ் சாறும் கடைந்து கொடுக்கவும் மந்தம் குணமாகும்.

கண் புகைச்சலுக்கு

கொட்டைப் பாக்களவு காயவேருக்கு அந்த காயின் வெற்றிலைக் காம்பு அரைத்து அதை வெண்ணெயில் மத்தித்து வைத்துக் கொண்டு கண் புருவ இமையில் பூச கண் புகைச்சல் குணமாகும்

கட்டுவலிக்கு

இஞ்சிரசம் சேர்த்து அரைப் படி தண்ணீரில் போட்டு அரைக்கால் படியாகக் காய்ச்சி அதில் வெண்ணெய் பாக்களவு போட்டு கொடுக்கவும் கட்டுவலி தீரும்.

சீதபேதிக்கு

இஞ்சிரசமும் புளியங்கொழுந்தும் எருமை தயிரில் அரைத்து காய்ச்சிய தயிரில் கலக்கி கொடுக்க சீத பேதி குணமாகும்

கட்டுவலிக்கு

பரிகிளை ௩௰ பலம் கொண்டு வந்து வெதுப்பிய இஞ்சிரசம் போட்டு அதை நொறுக்கி படி நீர் விட்டு 1/4 படியாக காய்ச்சி கொடுக்க கட்டுவலி தீரும்.

சிரங்குக்கு

அமுதாரம் வராகனெடை உ
உப்பு வாளைக்கம் வராகனெடை உ இவ்விரண்டும்
பொடி செய்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி
வைத்துக் கொண்டு பூசி வரவும் சிரங்கு தீரும்.

நிலவாகை வேரை வெள்ளாட்டுப்
பால் விட்டு அரைத்து 1/2 படி பாலில் காய்ச்சி
12. பசுவின் நெய்யில் மிதத்து தினமும் நாள் பத்து
சிரங்குக்கு பூச சிரங்கு தீரும்.

கெந்தகம் வராகனெடை உ,
கார்போகரிசி வராகனெடை உ, கஸ்தூரி மஞ்சள்
வராகனெடை உ இம்மூன்றும் கூட்டிப் பொடி
செய்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி
சூரியபுடம் வைத்துக் கொண்டு சிரங்குக்கு பூசவும்.

இருதலைவலிக்கு

வேளை இலையும் வெள்ளுள்ளியும்
தட்டி அரைத்து நாசியில் நசியம் பண்ண இருதலைவலி
தீரும்.

வெளிக்கிக்கு

எருக்கலம்பூவை வாட்டி
செவியில் பிழிய வெளிக்கி தீரும்.

வாசத்துக்கு

வசம்பு வேரும் சுநாகமுத்தும்
திரிகை செய்து வைத்துக் கொண்டு திருநீறாய் அரைத்து
நசியம் பண்ண வாசம் தீரும்.

மேல் கருப்பு சொறிக்கு

சுக்கு, மிளகு, திப்பிலி இம்மூன்றும் தட்டி அரைபடி தண்ணீரில் போட்டு காய்ச்சி நாலில் ஒன்றாய் இருத்து இரண்டு நேரமும் கொடுக்கவும் மேல் கருப்பு சொறி தீரும்.

மார்த்துக்கு

மருதம்பட்டை இடித்து சாறு பிழிந்து அரைக் கரண்டி நல்லெண்ணெய் விட்டு கொடுக்க குணமாகும்.

சிலேற்பனத்துக்கு

தூதுவளை இலையை இடித்து சட்டியில் வேகபட்ட அதில் இந்த மருந்தை வைத்து
13. அதன் மேல் சுக்கு, மிளகு, திப்பிலி இம்மூன்றும் பொட்டணம் கட்டி மேல் வைத்து மூடி அவித்து அந்த மருந்தை எடுத்து அந்த இலைச்சாறு விட்டு அரைத்து அந்த தண்ணீரில் அரைக்கால் படியில் கலக்கி கொடுக்க சிலேற்பனம் விட்டுப் போகும்.

சிலேற்பன நீராளக் கட்டுக்களால்

அரைப்படி உப்பை வறுத்துப் பொட்டணம் கட்டி ஒத்தடம் கொடுக்க சேர இடைக்கால் நீரெல்லாம் போகும்.

நொச்சியிலையை இடித்து சட்டியில் வேகபட்ட அதின் மேல் மருந்தை

வைத்து மேல் சுக்கு, திப்பிலி, மிளகு, வெள்ளுள்ளி வகை . . . . . . பொட்டணங்கட்டி வைத்து மேல் சூடு பட்டு அவித்து எடுத்து அந்த மருந்தை பட்டு சாறு விட்டு அரைத்து அந்தக் காயத்தில் கொடுக்க கிலேசமான வாதமெல்லாம் போம்.

மந்த சுரத்துக்கு

வெள்ளுள்ளி-வ-பலம் எடுத்து உரித்து தட்டி தண்ணீர் விட்டு காய்ச்சி அரைக் காப்படி தண்ணீரில் அரைத்து கொடுக்கவும் மந்த சுரம் விட்டு போகும்.

பாலர்களது பேதிக்கு

அரை வீராகனெடை கோ-ரோசனையை அரைக்கால்படி தாய்ப்பாலில் அரைத்து கொடுக்கவும்.

மஞ்சள் அரைத்து பூசிக்க மாறும்.

பேதிக்கும் மேகத்துக்கும்

ரோசாப்பாக்கை குமரிசாற்றில் ஊறித்து எடுத்து மறுபடி எருமை சாணிப்பாலில் அவித்து எடுத்து மறுபடி ஆவாரம்பாலிலரைத்து இந்த வகையில் நெல்லிவாகு சாமம் வைத்து சுத்தி செய்து போக்க மேலான சுக்கிலமான பதுத்தியமான

செம்முள்ளியிலை, ஈசம், வெள்ளுள்ளி, மாசி
இவையெல்லாம் சேர்வாளத்துக்கு கடைக்குப்படி
இடித்து கவளம் போலே வைத்து கொண்டு நெல்லிக்
காய் அளவு அதிகாலையில் போட்டு கொள்ளவும்
இப்படி கொள்ளவும். 5-நாள் கொடுக்கவும் பேதியும்
மேகமும் குணமாகும்.

14. நரம்புசிலந்திக்கு

கோடகசாலைகிழங்கு அரைத்து
தீட்டி கட்டவும். நரம்புசிலந்தி குணமாகும்.

நெஞ்செரிப்புக்கு

செம்முள்ளி இலையை இடித்து
சாறு வாங்கி பதத்து கொண்டு அரைவீசம்படி
சாறு கொள்ளவும். இப்படி 3-நேரம் கொண்டால்
அனலும் சூடும் அடங்கிப் போகும்.

சுரத்துக்கு

இரசம் பிரகாணம் - 1, நாபி
பிரகாணம் - 1 தும்பை சாறு விட்டு இரண்டு நாள்
அரைத்து கிளிகை செய்து உலர்த்தி வைத்து கொண்டு
அந்த கிளிகையை இஞ்சிப்பாலுடன் அரைத்து கொடுத்தால்
சுரம் விலகி ஓடிப் போகும்.

இன்னைசெய்த சேர்வாளம் 3கு
மிளகும் இஞ்சிவேர் இரண்டு மிளகும் கொண்டு

மாதுளை சாறு விட்டு அரைத்து மிளகு அளவு உருண்டை செய்து உலர்த்திவைத்துக் கொண்டு ஒரு உருண்டை கருப்புகட்டியில் கொடுக்கவும் பேதியாகும் மந்தியினால் மலம் நீரும் சாதமும் உண்ணவும் பேதி நிற்கும். சாயங்காலம் [illegible] சாப்பிடவும். வாயாதி குணமாகும். அவ்வாறு பாகமாய் செய்யவும்.

கண் நோய்க்கு

கடுக்காய் வராகனெடை 3, திப்பிலி வராகனெடை 3, மிதரோகனி வராகனெடை, மாசிக்காய் வராகனெடை 1, கிராம்பு வராகனெடை, [illegible] வராகனெடை 2, சாதிக்காய் வராகனெடை, சடாமாஞ்சி வராகனெடை 2 இவையெல்லாம் மதுசாறு விட்டு அரைத்து உருக்கயிறுபோல் உருட்டி உலர வைத்து நெல் பானையில் 20-நாள்
15. புதைத்து எடுத்து வைத்து கொண்டு குளிர்ந்த தண்ணீ-ரில் உரைத்து கண்ணிடவும் அந்தகண் வலியும் குணமாகும்.

நீர்ப்பாயுகண்ணுக்கு

வெள்ளைக்காக்கணவேரை ஆவின் பாலில் அரைத்து உலர்த்தி குளிர்ந்த தண்ணீரில் உரைத்து கண்ணிட கண்ணில் [illegible]ந்தி மாறும்.

நீர்பாயுங்கண்ணுக்கு

பிஞ்சுகொன்னையின் பூக்கள் பாலும் மத்தித்து கண்ணிலிட நீர் மாறும்.

வெள்ளெழுத்துக்கு

கோழிவெள்ளைக் கருத்தை தேனில் சேர்த்து கண்ணிலிடவும் வெள்ளெழுத்து மாறும்.

புங்கன் அரிசி, பாசி, துளசி இலை இம்மூன்றும் மென்று துவையலாட்டு பிழிய வெள்ளெழுத்து மாறும்.

120 நாளாக இருந்த தயிர் தெளியாட்டு குடித்துவர வெள்ளெழுத்து மாறும்.

பல்காலும் நீர் இறங்காமலிருக்க

நீலத்தாமரையை ஆவின் பாலில் அரைத்து கீரைக்கல் மட்டு பாலில் கொடுக்கவும் நீர் இறங்குவது நிற்கும்.

நீர்க்கடுப்புக்கு

சிறுநெருஞ்சிவேர், குறுந்தொட்டி வேர், அடுதீண்டாப்பாளை வேர் இம்மூன்றும் சமமாக ஆவின் பாலில் அரைத்து நெல்லிக்காயளவு அந்த பாலில் கொள்ளவும். நீர்க்கடுப்பு நிற்கும்

நீர் அடைப்புக்கு

ஏலம், வெங்காரம் வெள்ளரி வாழைக்கிழங்கு(வாழைத்தண்டு) சாற்றில் அரைத்துக்கொடுக்க நீர் அடைப்பு உடையும்.

மூன்று தேத்தான்வகையை இல

16. வெந்நீரில் அரைத்து 1/4 படி வெந்நீரில் கொடுக்கவும். நீர் அடைப்பு மாறும்.

வெங்காரப் பொரியும் வெள்ளரி விதையும் இள வெந்நீரில் அரைத்து 1/4 படி வெந்நீரில் கொடுக்க நீரடைப்பு மாறும்.

சுரைப இலைச்சாறு நல்லெண்ணெயில் சேர்த்து கொடுக்க நீரடைப்பு மாறும்.

ஆட்டுப்பாலும் நெய்யும் கூட்டி அடி வயிற்றில் தடவவும்.

சிறுகோரையின் கிழங்கும் தடவ தொப்புளடைநீர் மாறும்

சிறுபீளைவேர், சிறுநெருஞ்சி வேர், சிறுகீரைவேர், சிறுசெங்கழுநீர் வேர், பெருநெருஞ்சிவேர், பீக்கங்கொடி பிக்கசப்பளை பட்டை இந்த வகைகளெல்லாம் சமன் கூட்டி இடித்து இருநாழி தண்ணீர் விட்டு காய்ச்சி 1/4 படியாக இறுத்து வெண்காரம் பணவிடை பொரித்துப் போட்டு கொடுக்கவும். இப்படி 10-நாள் கொடுத்தால் உஷ்ண நீர்க்கடுப்பு நீர்த்தாரைகளும் இளகும்

உஷ்ணநீர் கடுப்பு

அருகங்கிழங்கு ஒருபிடி சிறுசெருப்படை ஒருபிடி இவை இரண்டும் சமன் கூட்டி

ஒருபடி தண்ணீரில் போட்டு நற்சீரகம் ½ வராகனெடை பொடித்து பசுவின் வெண்ணெய் ஒரு பாக்களவு கூட போட்டு 10- நாள் கொடுக்கவும். நீர்கடுப்பு தீரும்.

வாத சூலைக்கு

மரஞ்சிப்பட்டை வராகனெடை 3, மரப்பஞ்சிழுஞ்சு வராகனெடை 3, நாகுப்பாலைவேர் வராகனெடை 2, வெள்ளெருக்குவேர் வராகனெடை 2, சிவனார்வேம்பு வராகனெடை 3 இவையெல்லாம் இடித்து மூன்று பங்கு வைத்துக் கொண்டு ஒரு பங்கை எடுத்து இருநாழி தண்ணீரில் போட்டு
17. ¼ படியாக காய்ச்சி கொடுக்கவும். இந்தபடி 3- நாள் கொடுத்து அறுநாள் பத்தியம் ஒன்றும் ஆகாது. ~~[illegible]~~ 7-ம் நாள் தலைமுழுகி சகலமு தட்டக் கொள்ளவும் வாத சூலை தீரும்.

பித்தவெட்டை கன்னலுக்கு

முசுமுசுக்கை சாறு படி 2 நல்லெண்ணெய் படி 2 இவற்றை சேர்த்து காய்ச்சி பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

மேல்மருந்து

ஒரு பலகை நாயின் காய வைத்து கொளையப்பட்டால் தேய்த்துப் போட்டு

ஒரு துணியால் கொட்டப்பட்ட பின் தைலத்தில் போட்டு வைத்துக் கொள்ளவும். இந்த தைலம் 8-நாளைக்கு இரண்டு தடவை தேய்த்து சீயக்காய் அரப்பு தேய்த்து முழுகி வரவும். இந்தபடி பத்து முழுகு முழுகி வரவும் வெட்டை, உஷ்ணம், மேகம், கண்ணெரிவு கால்மேல் எரிவு கண் புகைச்சல் இவையெல்லாந் தீரும்.

தோசத்துக்கு

பெருங்குறிஞ்சா வேரும் சுக்கு மிளகும் பால் விட்டு உரைத்து நாக்கில் தடவ தீரும்.

நிம்பாலை வெற்றிலை தேனில் குழப்பி நாக்கில் போட — தோசம் போகும்.

க்ஷ பாரயத்துக்கு

மருதோன்றி வேர்ப்பட்டை (தேவையான அளவு) எடுத்து எருமை மோர் விட்டு கட்டி பாலில் அவித்து அதில் கல்கம் சேர் பட்டையை அந்த பால் விட்டு அரைத்து ஒரு பாக்களவு அந்த பாலில் கலக்கி 10-நாள் கொடுக்கவும். க்ஷ பாரயம் தீரும்.

பவுத்திரத்துக்கு

செய்யாக்கு வேரையும் கோவைக்காயும் கிளிஞ்சிலும் சுண்ணாம்பு இடித்து புளியம் பழம் (தோல்) நீர் போட்டு அதில் அந்த பொடியைப் போட்டு புகை பிடிக்கவும். இப்படி 3 நேரம் பிடிக்கவும்

அருகிலையும், நீர்முள்ளியிலையும் சிறுநெருஞ்சி இலையும் இம்மூன்றும் அரைத்து பூசவும். வீக்க மகோதரம் தீரும்.

18. ## அண்ட வாதத்துக்கு

கீழ் அன்னாசம்பு ஒரு எலுமிச்சங்காயை எடுத்து ½ படி இளநீர் தண்ணீரில் போட்டு கரைத்து அந்த தண்ணீரை தினமு ஒரு கரண்டி நல்லெண்ணெயில் ஒரு கரண்டி இரண்டும் சேர்த்து பணவிடை சர்க்கரையும் கூட்டி மூன்று நாள் கொடுக்கவும் தீரும்.

நிலக்கடலை ஒரு எலுமிச்சங் காயை அரைத்து ½ படி இளவெந்நீரில் கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்க அண்ட வாதம் குணமாகும்.

மலசல அடைப்புக்கு

வெடியுப்பு படி-2, சீனக்காரம் 2, வெங்காரப்பொரி ஒரு பணவிடை இவை ஒரு படி வெந்நீரில் போட்டு கொடுக்கவும் குணமாகும்.

மூலத்துக்கு

அத்திப்பட்டை, வெள்வேல பட்டை, கருவேலம்பட்டை இம்மூன்றும் சமனாக இடித்து இருநாழி தண்ணீரில் போட்டு காய்ச்சி

1/4 படியாக இறுத்து சர்க்கரைபோல் காய்ச்சி
கொடுக்கவும் மருமேயம் தீராதாகும்.

. . . .

வேப்பெண்ணெய் உள்ள

கையில் இந்தி ஒரு பாக்களவு சுண்ணாம்பு போட்டு
மத்தித்து தின்ன . . . . தீரும்.

நாய்க்கடிப்புக்கு

சீரகம் பாம்புகொடுப்பு
நூலைக் கொடுப்பு, நாய்க்கொடுப்பு இம்மூன்றும்
சமமாய் கூட்டி தேனில் பத்து நாளையில் போட்டு
காய்ச்சி உரைக்கும் கட்டுந்து அந்த எண்ணெய்
எடுத்து நாய்க்கு ஆகவும் நாய் நாட்டு போகும்.

கோமாரிக்கு

மஞ்சளும்படி 4 எண்ணெய்
படி 4 சுண்ணாம்பு கரைத்த தெளிவு படி 1
இம்மூன்றும் கூட்டி மூன்று நாள் கொடுக்கவும்
கோமாரி தீராதாகும்.

மஞ்சள் கோமாரிக்கு

19. மஞ்சள் ஒரு பாக்களவு
சுண்ணாம்பு ஒரு பாக்களவு இவை இரண்டும் கூட்டி
அரைத்து மூன்று நாள் கொடுக்கவும். ஒன்றும் அதற்கு
தேவையாகும் சோறும் காய்ப்படாதும்.

உஷ்ணகாசமானதுக்கு

கோவையிலை சாறுக்குள்
காயமதை அரைத்து 1/4 படி எருமை தயிரில் கொடுக்கவும்
இப்படி மூன்று நாள் கொடுத்தால் குணமாகும். பத்திய
பாகத்துடனே சாப்பிடவும்.

சுவாசகாசத்துக்கு ஊர்வசித் லேகியம்.

சித்தரமூட்டி வேர் பலம் 30
ஆடாதோடை வேர் பலம் 30 இவைகளைகொண்டும் நன்றாய்
இடித்து - 8 - தண்ணீரில் போட்டு இரண்டாக
காய்ச்சி வடித்துக் கொண்டு அந்த கஷாயத்தில்
நல்ல வெல்லம் பலம் 30 போட்டு அடுப்பேற்றி
காய்ச்சிக் கிழக்கும் பதத்தில் கடைமருந்து சுக்கு
பலம் 3, மிளகு பலம் 2 திப்பிலி பலம் 2 திப்பிலி
மூலம் பலம் 2, ஏலம் வராகனெடை 6, சீனாலவங்கம்
பலம் 6, லவங்க பத்திரி வராகனெடை 6, வங்கார
பச்சை வராகனெடை 3, ஜீரகம் பலம் 2, சவ்வியம்
பலம் 1, தாளிசபத்திரி பலம் 1 இவைகளெல்லாம்
நன்றாய் உரலில் போட்டு இடித்து வஸ்திரகாயம்
பண்ணி வெல்லப்பாகிலே போட்டுக் கிண்டி
லேகியபதமாய் வருகிற போது நாலு. தேன் கூட
விட்டு லேகியம் கிண்டி எடுத்து ஒரு பாத்திரத்திலே
வைத்துக் கொண்டு இந்த லேகியம் இரண்டு நேரமும்
இரண்டு கழற்சி அளவு சாப்பிடவும். இச்சாபத்தியம்
20. மேககுன்மம், பாண்டு, காமாலை, இடுப்புவலி,

இளைப்பு இருமல், மூலம், காமாலை, சோகை, பாண்டு, பீனசம், சர்வவாய்வு ரோக முதலான உபாதிகளெல்லாம் நீங்குமாகும். இந்த லேகியம் குருவாரயோகம் அமிர்தயோகம் சாத்யமான யோகம் செய்து கொள்ளலாம்.

அட்ட கிரந்திக்கு

அருக்காள கிழங்கு பலம் 15

கொடிவேலிவேர் பலம் 5, தாளிப்பட்ட பலம் 40 இம்மூன்றும் சிறுக சிறுக நறுக்கி ஒருநாள் வெயிலில் காயப்போட்டு எடுத்து இந்த மருந்தும் இரண்டு படி கல்லுப்பு சட போட்டு அது பாண்டத்தில் இவையெல்லாம் போட்டு மேலே மூடி சீலை மண்செய்து முழங்காலளவு ஒரு குழிவெட்டி அதில் பாண்டத்தை வைத்து அதன் மேலே எரு அடுக்கி கஜபுடமாய் போடவும். ஆறினபின் எடுத்து பின்னுமந்த மருந்தை பானையில் போட்டு மேல் மூடி சீலை மண்செய்து முன்போலக் கஜ புடம் போடவும். இப்படி நாலு தரம் புடம் போடவும். புடம் போட்டு எடுத்துக் கொண்டு பொடி செய்து வடிகொண்டு 10 தரம் வடித்து வைத்துக் கொண்டு இந்த மருந்துக்கு அனுபானம் திரிபலை வராகனெடை 5, சுக்கு வராகனெடை 5

கருக்ரோகங்கள் யாவைகளையும் இம்மூன்று மருந்து
தட்டி ஒரு பாண்டத்தில் போட்டு அபடி தண்ணீர்
விட்டு காய்ச்சி 1/4 படியாக இறுத்துக் கொண்டு
21. இந்த சூரணத்தில் மூன்று விரல் அளவு கஷாயத்தில்
போட்டுக் கொள்ளவும் அடங்கிவிடும் எட்டும்
தீரும்.

20. பிளவை மெழுக்கு

பெரும்பருத்திக்காய்ச்சாறுபடி,
இளநீர்படி 2, கரும்புச்சாறு படி 1, நீர்வள்ளி
கிழங்கு சாறு படி 2 பொன்முசுட்டைக்கிழங்கு
சாறுபடி 1, வெள்ளரிக்காய்ச்சாறுபடி 1 இவைகட
சுக்கு ஏலம், இலவங்கம், சுக்கு மிளகு கோஷ்டம்,
அதிமதுரம், சிறுநாகப்பூ மஞ்சட்டி, இலவங்க
பத்திரி தேக்கரு கொட்டை, தேவதாரம்,
உமத்தை, இலவம்பிசின், வெட்பாலை வேர்
வெட்டி வேர், நன்னாரிவேர், இலுப்பைப்பூ
இவைகளெல்லாம் வகைக்கு பலங்களை 2 இவை
யெல்லாம் ஒன்றாய் பொடித்து கலந்து
ஒன்றாய் நெய் படி 3 விட்டு மெழுகு பதம்
வடித்துக் கொண்டு இதைக்காக்க மெழுகு 4 நெய்
கலந்து கொண்டு தோம் இருகரண்டியாக

இரண்டு நேரம் கொள்ளவும். இந்த நாட்களில் அப்பாரகமும் மற்றும் உருளைக்கிழங்கு தவிர்த்து சாப்பிடவும். உஷ்ணம், சகல கசிவுகள் மற்றும் வெப்பு உடைமை, கண் புகைச்சல், கண் எரிச்சல் நீர் இறங்கல் முதலிய 20-வகை மேகமும் தீரும்.

வெடித்த பருவுக்கு

22. நல்வேளைக்சாறு, வேலி சாறு, நல்லெண்ணெய் இம்மூன்றும் சம அளவு கலந்து கொடுக்கவும் குணமாகும்.

மருந்தீட்டுக்கு

நாயுருவி இலை ஒரு பிடி [redacted] நெய்யதுக்கி நல்லெண்ணெய் 1/2 படியில் போட்டு காய்ச்சினால் தண்ணீர் போனவுடன் அந்த எண்ணெயை சாயங்காலம் காய்ச்சி தினம் காலம் கொடுக்கவும். அவ்வமயத்து தண்ணீர் பாக்கியில் ஒன்று சாப்பாடு மாறுவதால் வயிற்றிலுள்ள மருந்தெல்லாம் மாறும்.

பித்தத்துக்கு

சிறுபயறு வராகனெடை 5, அதிமதுரம் வராகனெடை 5, இஞ்சி வராகனெடை 5, ஏலம் வராகனெடை 3 அல்லிவேர் வராகனெடை 4 சீனா வராகனெடை இவையெல்லாம் இடித்து தேனிலாவது நெய்யிலாவது 3-நாள் கொள்ள பித்தம் குணமாகும்.

மாந்தத்துக்கு

29/11

சிறுபயறு 1/4 படி உடைத்து தோல் போக்கி நாள் மருக்காற்றில் ஊறப்போட்டு உலர்ந்தமாறு அந்த சாறு விட்டு அரைத்து சிரசில் தேய்க்கவும். சாயங்காலம் குளிர்ந்த தண்ணீர் விட்டு அலசிப் போடவும். மாந்தம் குணமாகும்.

மாந்தத்துக்கு தைலம்.

சிறுகீரைச்சாறு படி 1, தூது மிதுக்கு சாறு படி 1, பொன்னாங்காணிசாறு படி 1, குமரிச்சாறு படி 1, குருந்தொட்டி சாறு படி 1, பசலைச்சாறு படி 1, முசுக்சாறு படி 1, கையாந்தகரைச்சாறு படி 1, ஆவின்பால் படி 1, ~~நல்~~ நல்லெண்ணெய் படி 2 இதற்கு கடைசரக்கு

23. ஏலம், செங்கழுநீர் கோட்டம், லாமிச்சம்வேர், நன்னாரிவேர், கச்சோலம், சதகுப்பை, சந்தனம், நெல்லிப்பருப்பு, செண்பகமொட்டு இவை வராகனெடை 4 பாலாலும் பசலைச்சாறு யாலும் விட்டு அரைத்து கொள்ளவும் பசலைச்சாறு எல்லாம் ஒன்றாய் கூட்டி ஒரு பாண்டத்திலிட்டு காய்ச்சி மெழுகுபதத்தில் இறுத்து தலைக்கு தேய்த்து சீயக்காய் விட்டு நாலு நாளைக்கு ஒரு முழுக்கு முழுகி வரவும்.

பிரமேக ரோகம்

மதுரமானது போசித்தாலும், புளித்தகாய் போசித்தாலும், நெய்பால்தயிர் போசித்தாலும் குளிர்ந்த தண்ணீர் போசித்தாலும் நேரம் தப்பி போசித்தாலும் முன்செய்த கருமத்தினாலும் நீராமய வரும். வாதபித்த சிலேற்பனத்தினாலே வரும். வாதத்துக்கு நாலும் பித்தத்துக்கு ஐந்தும் சிலேற்பனத்துக்கு பத்து ஆக மேகம் 20 வாதத்தை எடுத்த நாலுக்கும் பேர் கற்பனையானது தாது பாரமானையும் மாங்கொட்டை முருக்கியையும்போல் கற்பனை மூத்திரம் விழும் தாயன நெய் வாசம் விழும். தாது பாரமான கழுதைநீர் போல விழும் மாங்கொட்டை முருக்கி அடப்பு நீர முருக்கைப்போலே விழுமதால் திரிகோடத்தினாலேயாயும் இது குரு கடாக்ஷத்தினாலே தீர வேணும்.

124. மத்திரத்துக்கு கஷாயம்

ஆரால் [illegible] கோட்டை காடை காணாங்கோழி காட்டுமான் வெள்ளாடு இவை வெள்ளாடும் உள்ளந்துமாகும் பொன்னாங்காணி சிறுகீரை தூதுவளை வெள்ளைத்தூதுவளை பேய்ப்பாகல் புடலங்காய் பிஞ்சுக்காய் கொத்து முருங்கைப்பிஞ்சு அத்திப்பிஞ்சு இது பதுகிங்காய் புடலம்பிஞ்சு, ஆவின்பால் நெய் மோர் தயிர் இவைவெல்லாம் ஆகும்

ஆகாதகள்

கொள்ளு, சுரைக்காய், காடை, கோழி, பன்றி, அரைக்கீரை, பாவக்காய், மொச்சைக் காய், பீர்க்கங்காய், தயிர், முள்ளங்கி, வாளை மீன், கெண்டை மீன், மொச்சை கத்திரிக்காய் இவை யெல்லாம் பத்தியத்திற்கு ஆகாது.

கண்டமாலை

நாவலம்பட்டை, வேம்பாடம் பட்டை, கருங் கொடிவேலி, இருவேலிவேர் முருங்கை வேர்ப்பட்டை இவை வகையொன்றுக்கு அரைக்கால்பலமாவு அரைத்து வெள்ளை முன்று மடு இவையெல்லாம் நெய்ய இடித்து ஒருபடி பசுவின் நெய்யில் போட்டு காய்ச்சவும் பொன்னிறமான பதம் கண்டு வடித்து வைத்துக் கொண்டு இந்த நெய்யில் ஒருநாள் ஒன்றுக்கு ஒருதுட்டெடை அளவு உள்ளுக்கு கொண்டு மேலும் பூசவும் புண்ணானாலும் கண்டாகின புண்ணானாலும் உள்ளுக்கொண்டு மேலும் பூசவும் இந்த
25. கண்டமாலை யாவும் தீருமாகும்.

வேறு மருந்து
(கண்டமாலைக்கு)

வேப்பமரப்பட்டையும்
கருஞ்சீரகம் கடுகும் கிராம்பும் சமன்தூக்கி
ஒரு தேங்காய் அளவு கொண்டு வந்து உரலில்
போட்டு இடித்து சட்டியில் போட்டு இரு
நாழி ஆட்டு மூத்திரம் பிசைந்து வடிகட்டி அந்த வடி
கொண்ட தண்ணீரில் 1/2 படி தண்ணீரில் கருங்
குருவை அரிசி ஊறப்போட்டு மாவாக இடித்து
மருந்து தண்ணீரில் உலை வைத்து இந்த மாவைப்
போட்டு களிக்கிண்டி எருமைக் கால்காயளவு
ஒரு துணியில் போட்டு அவன் கழுத்தில் சுத்தமும்
மஞ்சளால் கத்தி வைத்து கழுத்தில் கட்டி
விரல் வைத்து உப்பு சாப்பிட வேணும். இப்படி 3-நாள்
கொண்டால் எந்த கண்டமாலையும் தீரும்.

(சிலைக்கட்டுக்கு)

விளக்கெண்ணெய் படி 1/4,
20 சேங்கொட்டை நசுக்கி எண்ணெயில்
போட்டு கொதிக்க வைத்தால் கருப்பாகும் அப்பொழுது
கொடவேலிவேர் பொடி ஒரு பிடிக்கை
போட்டு தென்னைமட்டைக்கரி காப்படி (துண்டாக)
30 கல்ப்பம் போட்டு நன்றாக வேக வைத்து

கொண்டு 15-நாள் இரண்டு நேரமும் இரண்டு
கிராம் சாப்பிட்டு வரவும் கிலகட்டு
வாத நீரும். பத்தியம் ஒன்றும் ஆகாது.

சயம் இருமல் இளைப்பு

புளியிலைச்சாறுபடி 1/4.
நல்லெண்ணெய்படி - ௨ பாகாட்டுப் பால்
26 கருப்பட்டி பலம் 1/4 கூட்டி கலக்கி 3 - நாள்
கொடுக்கவும். 6 - நாள் பத்தியம் இருக்கவும்.
ஒன்றும் ஆகாது வெந்நீரும் சாதமும் உண்ணவும்

சேத்தான் கொட்டை, நற்
சீரகம் பலம் 1 இவ்விரண்டும் பொன்னிறமாக
வறுத்து பொடிசெய்து சீலைவடி கொண்டு
சீனிபலம் ௨ கூட கூட்டி அவ்வளவு நெய்
விட்டு லேகியம் செய்து ஒரு கழஞ்சி அளவு
மூன்று நாள் இரண்டு நேரமும் சாப்பிட்டு வரவும்
பத்தியம் ஒன்றும் ஆகாது தீரும் வியாதி
சயம், காசம், இளைப்பு, இருமல் சுவாச
காசம், மேக வாட்டி இவைபோகும்.

கிராணிக்கு

சுக்கு வராகனெடை 2, சுகந்த வராகனெடை 4 இவைகளை நெய்விட்டு நாலு நாழிகை சுத்தி செய்து சாதிக்காய் வராகனெடை 2, சாதிபத்திரி வராகனெடை 2, அதிமதுரம் வராகனெடை 3, திப்பிலி வராகனெடை 2, ஏலம் வராகனெடை 2, பெருங்காயம் வராகனெடை, மிளகு வராகனெடை 2, வெள்ளுள்ளி வராகனெடை 2, சுத்திரகம் வராகனெடை 2, இவையெல்லாம் வெதுப்பி முன் சரக்குகளும் சேர்த்து பொடி செய்து கொள்ளவும். நல்லெண்ணெய் பலம் 1 ஒருசட்டியில் போட்டு ஒருபடி தண்ணீர் விட்டு அடுப்பேற்றி கொதிக்கும் பதம் கண்டு இப்பொடியை பதத்திலே போட்டுக் கிண்டி லேகியம் செய்து கொள்ளவும் சாப்பாட்டு மாத்திரை அளவு லேகியம் எடுத்து

27. உள்ளுக்கு கொள்ளவும். கிராணி கழிச்சல் தீருமாகும்.

மருந்திடு முறை

இலவம் பட்டை எடுக்கவும்

காயவைத்து அரைத்து காடி விட்டு அரைத்து 1/4 படி காடியில் கலக்கி 3-நாள் கொடுக்கவும். மருந்தீடு தீரும்.

ஒருதலைவலிக்கு நசியம்

சீமைகிளும் தும்பையிலையும் நசுக்கி நசியம் பண்ணவும்.

மருதிலைப், வசம்பு, வெள்ளுள்ளி இம்மூன்றும் நசுக்கி நசியம் பண்ணவும் ஒரு தலைவலி நீங்கும்.

பிள்ளைகள் மாந்தத்திற்கு

பனைவெல்லம் வராகனெடை 2, நற்சீரகம் வராகனெடை 2, மஞ்சள் வராகனெடை 2, நீர்ப்பூடு அரிந்தபொரி ஒரு சோறு மொந்துகொட்டை வேர், பொன்னாங்கண்ணிவேர், சிறுகீரை வேர் இம்மூன்று வகைக்கு ஒருபடி சேர்த்து முன் மருந்து போட்டு நன்றாய் இடித்து ஒருபடி மாங்கொன்றையில் போட்டு காய்ச்சி வடித்து கொள்ளவும். பிள்ளை வயது அறிந்து ஒரு காண்டி அரைக்காண்டி எண்ணெய் கொடுக்கவும். பிள்ளையுடைய தாயார் மோரும் சோறு சாப்பிடவும் பிள்ளை மாந்தம் தீருமாகும்.

சீதபாக பேதிக்கு

எள்ளுப்படி 2, ஏலக்காய் படி - 2 முந்திரி தேங்காய் 1 நல்லவெல்லம் ஜாதிக்காய் காயவைத்து அண்ணாசிப்பூ ஒருகொட்டை பாக்கு அளவு இவையெல்லாம் நெய்யில் இடித்து தின்ன தீருமாம்.

பிள்ளைகள் மாந்தத்திற்கு

28.

வெற்றிலை, மா.போன்றி இலை
இரண்டும் நசுக்கி சாற்றை எடுத்து பாலைத்தா
காலை ஒரு சாமத்திலே பருக்குத் தட்டை கலக்கி
மூன்று நாள் கொடுக்கவும். பிள்ளைகள் மாந்தம்
குணமாகும்.

சூரியபுட எண்ணெய் வடக்கே
போகிற வெள்வேலம் வேர் சிறுபாலை வேரும்
நாரத்தங்காயைப் பிஞ்சு போல தட்டி நாவின்ஜினி
மூன்றும் வசம்புக்காய், சொன்னகருப்பு கடுக்காய்,
சாதிக்காய், ~~சாதிக்காய்~~ சாதிபத்திரி, இரண்டு
வராகனெடை 5 கடுக்காய் வராகனெடை 5, தான்றிக்
காய் வராகனெடை 3 இவையெல்லாம் தட்டி
நொறுக்கி இடித்து 1/2 படி எண்ணெயில்
போட்டு சூரிய புடமாய் வைத்து கொள்ளவும்.
பிள்ளைகள் வயது பார்த்து எண்ணெய் கொடுக்கவும்.
எண்ணெய் சிலவாகும் போதெல்லாம் பிள்ளையும்
எண்ணெயும் ஊட்டு சூரிய புடமாய் வைத்துக்
கொண்டு ஒரு வயது பிள்ளை முதல் 11 வயது பிள்ளை
களுக்கு கொடுக்கவும்.

—

மறைந்த உண்மை

கடுகு போன்றதாயினும்
அரைத்து கடல் அளவு உதவியைச் செய்தாலும்
கொண்டு அறிப்பானம் பதைத்தல் கொடுக்கவும்
மறந்தும் குணமாகும்.

மானிடர்களுக்கு

எருக்கம் பழத்தை தின்று
பின் பாடு அரைத்து மாம்பழத்தை பூசிவர மாசு
போகாக இருக்கும்.

பிசைந்த கசப்பு முருங்கைப் பூவும்
நிலவேம்பும்

பிள்ளை உண்டாகாதவர்களுக்கு பிள்ளை பாக்கியம்

29. எள் நிலவிரைத்து சாறை
நிலவிரைத்து தினசரி அரைத்து கொடுக்கவும்
பிள்ளை பாகும். எருமைக்கன்றுகாய்த்து கொடுக்கவும்.

பெண்ணின் சுத்த பிள்ளை பாக்கு

சித்திரக்காய்வாகுவேர்
பாக்கு கொண்டையின் (அதனுடன் அன்னமயின்) அரைத்து கொடுக்கவும். பிள்ளை
பாகும்.

அமரா நிலவேம்பு பூவுடையின்
நீரை உருவவும். இடுப்பைகயின் மேலே உருவ
பாடவும். வெல்வேளையில் கலந்தடைமல் வந்து

கையாலே அரைத்து சோறு தண்ணீரில் கொடுக்கவும் பிள்ளை ஆகும்.

இடது கையால் அரைத்து பிள்ளை இருந்த மாதம் கொடுக்கவும். இந்தப்படி கொடாதே போனால் இடம் மாறிப்பட்டு போகும். வெள்ளிலை நெல்லிக்காயளவு அரைத்து அதன் வெள்ளையை சமன் கூட்டி கொடுக்கவும்.

இறுக்கை இருந்த பிள்ளை ஆக

சாரட்டை வேர் வெந்நீரில் அரைத்து யோனியில் பூசவும் ஆகும்.

அரசம்பட்டையைக் காடி விட்டு அரைத்து கொடுக்கவும் பிள்ளை ஆகும்.

நாயுருவி வேரை அரைத்து யோனியில் பூசவும் கையாலே தள்ளவும் உள்ளே போகும்.

குயில் முட்டை பொடி செய்து இரசம் படி எண்ணெயில் போட்டு கொடுக்கவும்.

அமரை பெருங்காயமும் அரைத்து யோனியில் ~~பூசவும்~~ பூசவும் பிள்ளை ஆகும்.

? அயலாயத்தை ஒருபடி இடித்து பிழிந்து 1/4 படி ஆவாரம் பாலில் கலக்கி கொடுக்கவும்

பிள்ளை காய்ச்சலுக்கு

30.

கோட்டமணக்கு வேர்ப்பட்டை, முன்னை வேர்ப்பட்டை, செங்கத்தாரிப்பட்டை வகை ஒன்றுக்கு வராகனெடை 4 நன்றாய் இடித்து ஒருபடி ஆவின் நெய்யில் போட்டு காய்ச்சி வடித்துக் கொள்ளவும். அந்தக் காந்தை பிள்ளையுடைய தாய் சாப்பிடவும். பிள்ளைக்கு இந்த நெய்யை ஒரு துட்டெடை உள்ளுக்கு கொடுத்து சேயும் சுகமும் எந்த காய்ச்சலும் குணமாகும்.

ஆகாசக் கருடன் கிழங்கு

அரைந்து எடுத்த ஒரு கிழங்கை வசம்பு வராகனெடை 3 ஒருபடி விளக்கெண்ணெயில் போட்டு காய்ச்ச கருகு முறுகினால் இறக்கி ஆறாயக சுத்தம் செய்து வைத்துக் கொண்டு பிள்ளைகள் வயது கண்டு ஒரு கரண்டி ½ கரண்டி வரை கொடுக்கவும் அநேக காய்ச்சல் எல்லாம் தீரும்.

பிள்ளை மட்டிரோகத்துக்கு

கோரைக் கிழங்கு, சுக்கு, பற்பாடகம், விளாமிச்சம் வேர், சுக்கு, கொத்தமல்லி, பனைக்கி வராகனெடை ரு இவையெல்லாம்

கட்டி 3 படி தண்ணீரில் போட்டு 1/4 படியாக காய்ச்சி 3 நாட்கள் தினம் கொடுக்கவும் அந்த பாய் தணிக்கவும். ~~பாய் 2 நா~~ வரண்டு போகுதுக்கு அதிவிடையத்தை முலைப்பாலில் அரைத்து கொஞ்சம் தடவி சிறிது கொடுக்க பக்கினை தோஷம் குணமாகும்.

நாய்முக்கை பச்சையாகவும் உலர்ந்ததாகவும் எடுத்து 1/2 படிக்குப் பொடி செய்து பசுவெண்ணெயில் போட்டுக் காய்ச்சி இறக்கி

31. அரைவிட்டு நல்லெண்ணெய் வசம்புத்தேக்கு-1 பொடித்துப் போட்டு காய்ச்சி இறக்கிக் காலை உள்ளுக்கு கொடுத்து மேலும் பூசவும் பட்சி தோஷம் குணமாகும்.

கீழ்காய்நெல்லிவேர், ஆடு தாளவேர் ஆலம்விழுது சிறுநாயுருவிவேர் தெளிசமாகக் கட்டவும் பட்சி தோஷம் குணமாகும்.

அத்திப்பால் மாதுளம்பழம் பட்டினால் கயிறு திரித்துப் பட்டையாக திருஷ்டியாக கட்டவும். கோழிமுட்டை வெள்ளைக்கரு கட்டவும். எந்த தோஷமும் குணமாகும்.

கறுப்பான மேக ரோகங்களுக்கும் சிலேற்பனத்துக்கு

மகாகிருஷ்டிபஸ்மம்

கொண்டு வந்து நட்ட ஒரு படி தண்ணீரில்
போட்டு - ½ - படியாக காய்ச்சி மீதம்படி
மிளகெண்ணெய் த____ ஊட்டு உள்ளுக்கு
கொள்ளவும். பேதியாகும். பேதி மருந்தியினால்
மிளகுத்தூள் சோறு உண்ணவும் பேதிநிற்கும்.

சிலேற்பனத்துக்கு

செந்தொட்டி கொண்டுவந்து
இடித்து நாக்கி ஒருபடி தண்ணீரில் போட்டு ½ -
படியாகக் காய்ச்சி உள்ளுக்கு கொடுக்கவும்
சிலேற்பனம் தீரும்.

இலைக்கொண்டு (செந்தொட்டி)
வந்து உலர்த்தி சூரணம் செய்து வெருகடி அளவு
தேனில் கொள்ளவும். சிலேற்பனம் தீரும்.

சுரத்துக்குக் கஷாயம்

ஆடாதோடையிலை
ஒருபிடி கொத்தமல்லி பாகங்களை 4 - போட்டு
32 ஒருபடி தண்ணீரில் ஊட்டு ½ - படியாகக்
காய்ச்சி கொடுக்க சகலமான சுரம் தீரும்.

குன்மத்துக்கு

கருங்காலிவேர்ப்பட்டையும் இலையும் உலர்த்தி சூரணம் பண்ணி வெருகடி கொள்ளவும் குன்மந் தீரும். இதை கஷாயமிட்டுக் கொண்டு கொடுக்க குன்மம் தீரும்.

மாந்தத்துக்கு

கருவேப்பவேர்ப்பட்டை யிஞ்சியை ஒருபடி ஒருபடி தண்ணீரில் போட்டு அரைப்படியாக காய்ச்சி திப்பிலி வராகனெடை 2 உம் போட்டு கொடுக்க மாந்தம் தீரும்.

வாதத்துக்கு

மலைவேப்பவேர்ப்பட்டை-யைக் கொண்டுவந்து சுக்கு வராகனெடை 2 உம் போட்டு ஒருபடி தண்ணீரில் போட்டு ¼-படியாக காய்ச்சி கொடுக்க வாதமும் தீரும்.

சுரத்துக்கு

நிலவேம்பு சமூலங்கொண்டு வந்து சுக்கு வராகனெடை 2 கொத்தமல்லி வராகனெடை 2 உம் போட்டு ஒருபடி தண்ணீரில் போட்டு ¼-படியாக காய்ச்சி கொடுக்கவும் சுரம் தீரும்.

தோசத்துக்கு

கோரைகிழங்கு பலம் ௧ நட்டுப் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு காய்ச்சி -ஐ- படியாக கொடுக்கவும். தோசந்தீரும். சுரமுந்தீரும்.

கண்டுமிகத்துக்கு

பற்பாடகம் கொண்டுவந்து தண்ணீரால் கழுவி அசவான் பாலாகவும் விட்டு இடித்து சாறு பிழிந்து -ஐ- படி சாற்றில் -ஐ- படி நல்லெண்ணெய் கூட்டி விட்டு அதிமதுரம்
33. கோஷ்டம் மாசிக்காய் வகைகளை 2 அரைத்து போட்டு அடுப்பேற்றி மெழுகு பதத்தில் வடித்து இதை 8- நாளைக்கு ஒருதரம் முழுகி வரவும் கண்ரோகந்தீரும்.

அந்திர தாகத்துக்கு

வெட்டிவேர் வகைகளை 6 ஒரு படி தண்ணீரில் போட்டு காய்ச்சி -ஐ- படியாக கொடுக்கவும். தாகம் தீரும்.

பித்தசுரத்துக்கு

விளாமிச்சவேர் வகைகளை 4 ஒரு படி தண்ணீரில் போட்டு -ஃ- படியாக காய்ச்சி கொடுக்க பித்தசுரம் தீரும்.

மாந்தத்துக்கு

பேய்ப்புடல் வராகனெடை 4
இருபடி தண்ணீரில் போட்டு 4-படியாய்
காய்ச்சி கொடுக்கவும். மாந்தம் சுரம் தீரும்.

அதிசாரத்துக்கு

பட்டைத்திப்பிலி சுக்கிவகை
பலம் ௧ இருபடி தண்ணீரில் போட்டு -4-
படியாக காய்ச்சி கொடுக்கவும். அதிசார பேதி
தீரும்.

சின்னக்கு

நிலக்குமிளை வேரும் சுக்கும்
பலம் ௧ இருபடி தண்ணீரில் போட்டு -ஜ-
படியாக தண்ணீர் காய்ச்சி கொடுக்கவும். தீரும்.

சுரத்துக்கு

பெரியகுமிளை வேர் - பலம் ௧
இருபடி தண்ணீர் விட்டு காய்ச்சி - ஜ - படியாக
கொடுக்க சுரந்தீரும்.

சிலேற்பனத்துக்கு

தேவதாரு வேர் பலம் ௧
இருபடி தண்ணீர் விட்டு - ஜ - படியாக காய்ச்சி
குடிக்கவும் சிலேற்பனந் தீரும்.

வாதத்துக்கு

நில வேளை வேர் பலம் ௧
இருபடி தண்ணீரில் விட்டு அக்கரா வராகனெடை ௧ தட்டி
போட்டு ஜ-படியாக காய்ச்சி கொடுக்கவும் தீரும்

34. சுவாசகாசத்துக்கு

கண்டங்கத்திரி சமூலம்
உலர்த்திப் பொடி செய்து வேண்டிய அளவு
கொள்ள சுவாச காசம் தீரும்.

சிலேற்பனத்துக்கு

கொடுவாய்க்கத்திரி சமூலம்
உலர்த்திப் பொடி செய்து வேண்டிய அளவு
தேனில் குழப்பிக் கொள்ள சிலேற்பனந் தீரும்.

வெள்ளைக்கத்திரி சமூலம்
உலர்த்தி பொடி செய்து வேண்டிய தேனில்
கொள்ள சிலேற்பனந் தீரும்.

நீர்க்கடுப்பு மூத்திரக் கிரிசனத்துக்கு

சிறுநெருஞ்சி சமூலத்தை
கொண்டு இள வெந்நீரில் அரைத்து நெல்லிக்
காயளவு கொள்ளவும். ம-படி தண்ணீரில்
கொடுக்கவும். இதை உலர்த்தி பொடி செய்து
வேண்டிய அளவு 4-படி வெந்நீரில் கொடுக்க
மூத்திர கிரிசனம் நீர்க்கடுப்பு தீரும்.

சுக்கிலவாந்திக்கு

இலவவேர் பசை - ௧
ஒரு படி தண்ணீரில் போட்டு -ஜ- படியாக காய்ச்சி
கொடுக்க சுக்கில வாந்தி நீங்கும்.

சத்திவாந்திக்கு

இவ்வேளை ஒருநெல்லிக்
காயளவு இளவெந்நீரில் அரைத்து - ஓ - பழ
வெந்நீரில் கொடுக்கவும். சத்திவாந்தி தீரும்.

மேகத்துக்கு

நன்னாரிவேர் பட்டை
இதனை சூரணம் செய்துக் கொண்டு இரண்டு
பங்கு சூரணம் ஒரு பங்கு சீனியும் கலந்து
வைத்துக் கொண்டு வெருகடி அளவு கொள்ளவும்
மேகம் தீரும்.

35. இந்தகினால் வேர்பட்டையை
ஆவாரம்பாலில் அரைத்து ஒரு நெல்லிக் காயளவு
காலை தோறும் தடிப்பக் கொள்ளவும்
மேகம் தீரும்.

கால்வாதத்துக்கு

கிலுக்கிவேர் பட்டை
இள வெந்நீரில் அரைத்து நெல்லிக்காயளவு இள
வெந்நீரில் கலக்கி கொடுக்க கால்வாதம் தீரும்.
அண்டவாதமும் தீரும்
~~அண்டவாதத்துக்கு~~

மருந்திட்டிக்கு

நன்னாரிவேர் கொண்டு
வந்து வெந்நீராவது ஆவாரம்பாலாவது கலக்கி
கொடுக்கவும் மருந்திடு தீரும்.

பாதகடுப்புக்கு

நல்லபீர்க்கவேர் பலம் - ௧

சுக்கு பராகாணை 2 தட்டி இருபடி தண்ணீரில் விட்டு - ௪ - படியாகக் காய்ச்சி கொடுக்கவும் பாத கடுப்பு தீரும்.

நீரடைப்பு மூத்திரக்கிரிச்சரத்துக்கு

நெல்லிமரத்தையும் வேரும்

இளவெந்நீரில் அரைத்து ஒரு நெல்லிக்காயளவு உருட்டி ¼ படி இளவெந்நீரில் கலக்கி கொடுக்க தீரும்.

சீதக் கழிச்சலுக்கு

கோவையிலை அரைத்து ஒரு நெல்லிக்காயளவு அரைத்து உள்ளுக்கு கொடுக்கவும். சீதக் கழிச்சல் தீரும்

கிருமிபுழுக்கு

காக்கண வேர்பலம் 5 ஒரு படி தண்ணீரில் விட்டு - 4 - படியாகக் காய்ச்சி கொடுக்கவும். கிருமிபுழு நிற்கும்.

31 நீர்க்கட்டுக்கு

நெருஞ்சில் சமூலம்

இளவெந்நீரில் அரைத்து நெல்லிக்காயளவு உருட்டி வெந்நீரில் கலக்கி கொடுக்கவும். நீர் கட்டுக்கள் தீரும்.

பேதிக்கு

சிவதை சமூலம் உலர்த்தி சூரணம் செய்து கடுக்காய் பொடியும் சமன்கூட்டி வெருகடி அளவு 1/4 படி வெந்நீரில் கொடுக்கவும். பேதி மந்தியானால் குளித்து மாட்டு மோரில் சாதமும் சாப்பிடவும்.

வயிறு மாந்தத்துக்கு

நாயுருவி சமூலம் ஒரு பிடியில் விட்டு கசக்கி ஒருபடி தண்ணீர் விட்டு -4- படியாக காய்ச்சி கொடுக்க மாந்தம் தீரும்.

தேமல் படைக்கு

மூக்குட்டை சமூலம் உலர்த்தி சூரணம் வெருகடி கொள்ள தேமல் படையும் தீரும்.

மூலத்துக்கு

மூக்கரட்டை வேரை இடித்து சாறுபடி 1, ஈ.நெய், வெல்லெண்ணை அரைத்து எண்ணையில் போட்டு அடுப்பேற்றி காய்ச்சி பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு 7- நாளைக்கு ஒரு தடவை குளித்துவரவும் மூலம் தீரும்.

திருவெண்பாதுக்கு

செம்பொன்னாலேர் பலம் 1
ஒரு படி தண்ணீரில் போட்டு 4-படியாக
காய்ச்சி கொடுக்க திருவெண்பாந்தீரும்.

37 சுரத்துக்கு

சித்தாமுட்டிவேர் பலம் 1
கொத்தமல்லி வரகனையுடன் தட்டிப் போட்டு ஒரு
படி தண்ணீர் விட்டு ¼ - படியாகக் காய்ச்சி
கொடுக்க சுரம் தீரும்.

சகல சுரத்துக்கும்

பேராமுட்டிவேர் பலம்-1
கொத்தமல்லி வரகனையுடன் தட்டிப் போட்டு
ஒரு படி தண்ணீர் விட்டு ¼ - படியாக
காய்ச்சி கொடுக்க சகல சுரம் தீரும்.

சுளுக்குக்கு

கொடிப்பாலை இலையை
அரைத்து சுளுக்கின் இடத்தில் பூசி தேய்க்க சுளுக்கு
தீரும்.

கறுப்பாலையிலையை தண்ணீரில்
விட்டு காய்ச்சி சுளுக்கின் இடத்தில் தடவ சுளுக்கு
தீரும்.

மாந்தத்துக்கு

திருநாமப்பாலை சமூலமும்
பலம் ௧ இருபடி தண்ணீர் விட்டு - அ - படியாகக் காய்ச்சிக் கொடுக்க மாந்தம் தீரும்

அதிசாரத்துக்கு

குடசப்பாலை வேர் பலம் - ௧
இருபடி தண்ணீரில் விட்டு - அ - படியாகக் காய்ச்சிக் கொடுக்க அதிசாரம் தீரும்.

பித்தத்துக்கு

மாம்பாலை வேர் பலம் - ௧ -
இருபடி தண்ணீர் விட்டு - அ - படியாக காய்ச்சிக் கொடுக்க பித்தம் தீரும்.

வாதத்துக்கு

வெள்ளை ஆமணக்குவேர் பலம் ௧
38. சுக்கு வராகனெடை 2 கூட கூட்டிய இருபடி தண்ணீர் விட்டு - அ - படியாக காய்ச்சிக் கொடுக்க வாதம் தீரும்.

சத்திக்கு

கொம்மட்டி மாதளை
வேர் பலம் ௧ இருபடி தண்ணீர் விட்டு - அ படியாக காய்ச்சிக் கொடுக்க சத்தி தீரும்.

தனமாந்தத்துக்கு

சிறுகீரை வேர் பலம் - 5
இருபடி தண்ணீர் விட்டு . அ படியாக காய்ச்சிக் கொடுக்க தனமாந்தம் தீரும்.

தாகமயக்கத்துக்கு

சீனாச்சக்கரை வராகனெடை 4 1/4 இளவெந்நீரில் கலக்கிக் கொடுக்க தாகமு மயக்கமுந் தீரும்.

கல்லடைப்புக்கு

செங்கழுநீர் பலம் 1 ஒருபடி தண்ணீர் விட்டு -¼- படியாக காய்ச்சி கொடுக்க கல்லடைப்பு தீரும்.

சுரத்துக்கு

வெள்ளைகருப்பு பலம் 1 தட்டு ஒருபடி தண்ணீரில் விட்டு -¼- படியாக காய்ச்சி கொடுக்க சுரம் தீரும்

விக்கத்துக்கு

மயிலிறகை அரைத்து விக்கத்துக்கு பூசவும்.

சொரியலுக்கு

சீனாக்கனி ஒரு பூப்பு வராகனெடை 2 இளவெந்நீராகிலும் ஆவாரம்பாலாகிலும் அரைத்து -¼- படியாக் கலக்கி கொடுக்க தீரும்.

சிறுநீர்க்கடுப்புக்கு

சிறுநெருஞ்சி வேர் பலம் 1 ஒருபடி தண்ணீரில் விட்டு -[illegible]- படியாக காய்ச்சி கொடுக்க நீர்க்கடுப்பு மாறும்.

39. மாசத்துக்கு

அருகுவேர்ப் பட்டையை இள
வெந்நீரில் அரைத்து ஒரு பாக்களவு இளவெந்நீரில்
கலக்கி எந்த மாசமும் தீரும்.

பாசாணம் முறிய

பாகலிலையை இடித்து -ல-
படி சாறு கொடுக்க பாசாணம் முறியும்.

கிறாணிக்கு

காட்டாத்தி வேர்ப் பட்டை பலம் 5
ஒரு படி தண்ணீர் விட்டு -ஜு- படியாக காய்ச்சி
கொடுக்கவும் தீரும்.

சயங்களுக்கு

சிறுமுய்க்கை சமூலம் உலர்த்திப்
பொடி செய்து திரிகடி அளவு தேனில் கொள்ளவும்
சயம் தீரும்.

புண்கிரந்திக்கு

புன்னைவேர்ப் பட்டையை இள
வெந்நீராவது ஆவின் பாலாவது அரைத்து ஒரு
நெல்லிக்காயளவு வெந்நீராவதும் பாலாவது கொடுக்க
கிரந்தி தீரும்.

சிவக்கம்வேர்ப் பட்டையை ஆவின்
பாலாவது வெந்நீராவது விட்டு அரைத்து -ஜு- படியில்
கலக்கி கொடுக்க கிரந்தி தீரும்.

காமாலைக்கு

கீழ்க்காய்நெல்லியிலையை அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு உண்ணக் கொடுக்க காமாலை தீரும்.

உஷ்ணநீர்க் கடுப்புக்கு

சீனக்காரம் வராகனெடை -½- படி தெளிந்த நீரில் கலக்கிக் கொடுக்க உஷ்ணநீர்க் கடுப்பு தீரும்.

நீர்க்கட்டுக்கு

தேத்தான் விதையை அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு -½- படி வெந்நீரில் கொடுக்க நீர்க்கட்டு மாறும்.

மாந்தத்துக்கு

தகரை சுக்கு சட்டியிலிட்டு கருக்கி ஒரு படி தண்ணீரில் போட்டு காய்ச்சி -½- படி இருக்க கொடுக்கவும் வயிறு மாந்தம் தீரும்.

பாண்டுக்கு

கரிப்பானையும் பத்து மிளகுமரைத்து நெல்லிக்காயளவு உண்ணக்
40. கொடுத்து மோரை அருந்த மோருடன் மதப் பாண்டு தீரும்.

சொறிக்கு

எருக்கிலைவேர் பலம் 5 ஒரு படி தண்ணீரில் போட்டு - ஜ - படியாக காய்ச்சி கொடுக்க சொறி தீரும்.

உடல் அனலுக்கு

மிளகு தக்காளி இலை இடித்து பிழிந்து வீசம்படி சாறு உள்ளுக்கு கொடுக்க உடல் அனல் தீரும்.

மூத்திர கிரிச்சரத்துக்கு

நெருஞ்சி சமூலம் பலம் 1 ஒரு படி தண்ணீர் போட்டு காய்ச்சி - ஜ - படியாக கொடுக்க மூத்திர கிரிச்சரம் தீரும்.

கண்ணுக்கு

முருங்கைக் கொழுந்து சூதும் தட்டி கண்ணில் பிழிய கண் புகையும் வெள்ளையும் தீரும்.

தோஷத்துக்கு

நல்ல துளசி சமூலம் பலம் 1 ஒருபடி தண்ணீர் போட்டு காய்ச்சி - ஜ - படியாக காய்ச்சி கொடுக்க தோஷ குணம் தீரும்.

சொறிக்கு

திப்பிலி பலம் 1 வெதுப்பி பொடி செய்து தேனில் குழப்பி கொடுக்க சொறி தீரும்.

அமாத்துக்கு

வெள்ளுள்ளி அரைத்து உருண்டைக் காயளவு - ஐ - பகல் வெந்நீரில் கொடுக்க வாதம் தீரும்.

வேக கடுப்புக்கு

சீரகத்தை அரைத்து உரு ண்டைக் காயளவு - ஐ - பகல் வெந்நீரில் கொடுக்க வேக கடுப்பு தீரும்.

வாத கடுப்புக்கு

வெள்ளெருக்கம்வேர் பட்டை தட்டி உருபடி தண்ணீரில் வாட்டி - ஐ - பங்காக காய்ச்சி கொடுக்க வாத கடுப்பு தீரும்.

கிரந்தகுக்கு

கருநொச்சி சமூலம் பட்டை தட்டி உருபடி தண்ணீரில் ——— (தொடங்கவில்லை)

சீதள வாயுவுக்கு

41.

சுக்கு வராகனெடை 6, மிளகு வராகனெடை 6, திப்பலி வராகனெடை 6, தேசாவரம் பேரரத்தை வராகனெடை 6, சித்தரத்தை வராகனெடை 6, கிச்சில் வராகனெடை 2, கருஞ்சீரகம் வராகனெடை 6, கடுகு வராகனெடை 2, மாஞ்சிப்பட்டை வராகனெடை 1; மற்பலகித்து

வராகனெடை 1, பெருங்காயம் வராகனெடை 1
வெள்ளுள்ளி வராகனெடை 2 கடுகடுக்கியானை,
வெள்ளை நொச்சியானை, சுக்கங்குப்பா, உகாய்,
வெள்ளறுகு, நல்வேளை, சிறுசெருப்படை, பெருநெருஞ்சு
நாராகரந்தை செங்கத்தரிப்பட்டை, மஞ்சணத்திப்
பட்டை, ஆவரசம்பட்டை, கொடிவேலிவேர்,
வகைக்கு பலம் ¼ வீதம் அரைத்து ஒருபடி
எண்ணெயில் கலக்கி மெழுகு பதமாய் காய்ச்சி
எடுத்து வைத்துக் கொண்டு தேவை செய்து
சாப்பிடவும்.

42. கொத்துமல்லி, ~~[illegible]~~ உசாமம், சிறுதேக்கு / நெல்லிமுள்ளி
இந்த ஆக்கு முத்துடன் சேர்த்து கொடுப்பதாகில்
முத்தி வாத பித்தம் சீதள சுரங்களும்
அத்தியோடு இன்ம வாய்வு அண்ட வாய்வு தீரும்
உரை :.

கொத்துமல்லி வராகனெடை 4, சிறுதேக்கு
வராகனெடை 4. நெல்லிமுள்ளி வராகனெடை 4, சுக்கு
வராகனெடை 4, கோரைக்கிழங்கு வராகனெடை 4
வெட்டிவேர் வராகனெடை 4 இந்த ஆறு வகையும்
சேர்த்து கஷாயம் வைத்து 3-நாள் கொடுக்கவும்.
எந்த எந்த சுரமானாலும் நீங்கும். பத்தியம்
பால். பாகற்காய் தள்ள வேண்டியது.

நாவரட்சி மருந்துக்கு

ஏலம் அதி மதுரம் கோட்டம் நன்னாரி சுக்கு
மாதுளம் பிஞ்சு காயும் மருவையே செய்த போது
நாவரள் கொள்ளும் போது நன்னாரி சாரமெல்லாம்
போய்விடும் மனிதர்கெல்லாம் மருந்தை அறிய சொன்னோம்.

விபரம் ! ~~[illegible]~~ !.

ஏலவ்வோர், அதிமதுரம், கோட்டம்பால், நன்னாரி, சுக்கு, மாதுளந்தோடு, கோரைக்கிழங்கு, இந்த 7-வகையும் சமன் கொண்டு கஷாயம் வைத்து 3-நாள் குடிக்கவும். எப்படிப்பட்ட நீரையும் வயிற்றுப்பட்டங்களும் சகலக்கிருமும் குணமாகும். மத்தியம் ஆனா. ஆனைப்பால் தள்ளவும்.

43. கெந்தக தைலம்

கெந்தகம் வராகனெடை 5O. பசுவின்பால் 11 தரம் சுத்தி பண்ணி வராகனெடை 3 .... வராகனெடை 3. காரம் வராகனெடை 3 வெடியுப்பு வராகனெடை 10 பசுவின் நெய்ப்படி ... வைக்கவும். அரைத்து 3-சாமம் அரைக்கவும். மெல்லிய மார்க்ய சீலையில் 2 இட்டு திரித்து தேட்டில் அக்கினி தணலிட்டு

அதன் மேல் தரையை சுத்தம்செய்து மெழுகு கோலமிட்டு
மேற்கு சீலைமண்செய்து அட்டில் எரு வடக்கில்
கிடப்பு இடையப்பால் வைத்து பின்பாளை கீழே வைத்து
தமரு இச்சையிட்டு தயிலம் இறக்கி எடுத்து அனுபானம்
சாற்றில் இரண்டு முத்துபோடை கொடுக்க மலகோதாம்
தீரும். நீம்ப சாற்றில் கொடுக்க இரைநோய் தீரும்
வெருகல் கிழங்கு தயிலத்தில் இம்மம் தீரும். சீனியோ
கொடுக்க தாது உண்டாகும். சாதிக்காய், சாதி
பத்திரி தூள் தேனில் கலந்து சாப்பிடவும். தாது
புஷ்டி உண்டாகும். கொட்டைவேல தயிலத்தில்
கொடுக்க உதாம்புகள் புண்கள் தீரும். கொண்ட
அக்காலம் கொய்யாப்பழம் தாகந்தன் சாப்பிடவும்.
நீராகாரத்தில் சாப்பிட பித்தம் தீரும். தாழிகிழ
கசாயத்தில் சாப்பிட மேகம் தீரும். இம்மத்துக்கு
கல் கோவை ஜூ, கோவை இலைய மலரும் சேர்த்து
44 || — நான் சாப்பிட்டுவரவும். இம்மமற்றது தீரும்.
மேனியான். கிருஷ்ணகட்டு, இடதிண்ணை திரையால்
சாப்பிட ஸகலவாயுநோயும் தீரும்.

இரச செந்தூரம்

45.

இரசம் வராகனெடை 10, கெந்தகம் வராகனெடை 2, கோழிமுட்டைக் கருவுமிட்டு நாலு சாமம் அரைத்து உப்பில் நட்டு காயவைத்து அவ் கட்டிக்குள் வைத்து சீலை செய்து ஒரு மணலில் நடு மையம் வைத்து சட்டிக்கு மண் செய்து நாலு சாமம் தீ எரிக்க செந்தூரம் ஆகும் அநுபானம் கொண்டு கொடுக்க சகல வாயுவும் தீரும். இது செய்து அநுபோகவே நல்ல முறை தெரிந்திருக்க வேண்டியது.

கொள்ளவே காசிடை நாலுண்ணச் செய்து
 கொடுத்தாரு கிரகமெல்லாம் [illegible] போம்
உள்ளுவோன் பேதியும் வாய்வு தாகம்
 வெள்ளைப்பாண் கொள்ளைநோய் தீர்ந்து போகும்
உள்ளுவோன் தீப்பான வேகத்தை கேளு
 மேன்ன தேத்துப்பகள் தீர்ந்து போகு
உண்மை தீப்பானய மலத்தான் [illegible]
 உயர்ந்த [illegible]

46 மேகத்துக்கு எண்ணெய்

சுக்கு வராகனெடை 6, மிளகு வராகனெடை 6, திப்பிலி வராகனெடை 6, தேசாவரம் வராகனெடை 6, சித்தரத்தை வராகனெடை 6, பேரரத்தை வராகனெடை 2, கிச்சிலி வராகனெடை 3, கடுகுரோகணி வராகனெடை 6, கருஞ்சீரகம் வராகனெடை 6, மரல்கிபட்டை வராகனெடை 1, சிறுப்பல்கிழங்கு வராகனெடை 1, பெருங்காயம் வராகனெடை 1, வெள்ளுள்ளி வராகனெடை 2, ? அடுதொட்டியிலை, வெள்ளை நொச்சியிலை, சங்குகுப்பியிலை, உகாயிலை, வெள்ளருகிலை, நிலவாகையிலை, சிறுசெருப்படை, பெரும் செருப்படை, நாராகரத்தை, செங்கத்தாரிபட்டை, மஞ்சணத்திபட்டை ஆவாரம்பட்டை, கொடுவேலிவேர் வகைக்கு 1/4 பலம் அரைத்து 3 படி எண்ணெய் கலக்கி மெழுகு பதமாய் காய்ச்சி ஸ்நானம் செய்து சாப்பிடவும். மேக கண்டது.

47 கட்டுவிளக்க செயநீர்.

பூரம், கரியுப்பு கட்டு நவச்சாரம், வெள்ளை வெங்காரம், சீனிக்காரம்,

அன்னபேதி, பாறையுப்பு, வெடியுப்பு சம
எடை கூட்டி வெள்ளாங்காளி சாற்றால்
அரைத்து காயவைத்து 10 எருவால் புடமிட்டு
அப்பால் மேற்படி சாறு தேனால் அரைத்து வில்லை
தட்டி பிங்கானில் வைத்து பனியில் வைக்க
செயநீர் ஆகும். அந்த நீரை அப்பிரக தகட்டில்
வைத்து சகல சரக்கும் - 4 - சாமம் சுருக்கு
கட்டும்.

48. உரத குளிகை

முருங்கைப்பட்டையின் வராகனெடை
5, முருங்கைக்கொழுந்து வராகனெடை 5, கொடிவேலி
வேர் வராகனெடை 5, வெள்ளைப்பூடு வராகனெடை 5,
சிறாவள்ளு வராகனெடை 20, கருப்புக்கட்டியால்
வராகனெடை 5 இவ்வளவு மருந்து இடித்து புன்னை
காய் அளவு அந்தி சந்தி சாப்பிடவும். வயறு
கடுப்பு தீரும்.

கட்டுவாதி மாத்திரை

சாதிக்காய், சாதிபத்திரி,
கிராம்பு, கசகசா, மாசிக்காய், கடுக்காய்பூ, சீரகம்,
அதிவிடயம், வெந்தயம், அபின், கோரோசனை
வகைக்கு சமனெடை தாய்ப்பால் விட்டு அரைத்து
வைத்து மிளகு பிரமாணம் கொடுக்கவும்.

49

கருமுகசெந்தூரம்

வீரம் வராகனெடை 1, பூரம் வராகனெடை 1, இரசம் வராகனெடை 1, இரச செந்தூரம் வராகனெடை 1, லிங்கம் வராகனெடை 1 எல்லாவற்றையும் வெங்காரத்தை சுண்ணாம்புப்பாலில் சுத்தி செய்து மேற்படி உலர்த்திப் போட்டு நாலு சாமம் அரைக்க கட்டிப் போகும். மேற்படி அரைத்த வெங்காரத்தில் அஞ்சு வராகனெடை எடுத்து மேல் எழுதிய சரக்கு அதோடே போட்டு அரைக்கிறது உலர்த்தாமல் சாமம் அரைத்து மேற்படி ஓட்ட விட்டு எடுக்க ரோசப்பூ நிறமான செந்தூரமாக இருக்கும். இந்த செந்தூரம் சன்னி, சுரம், வாய்வு, உதிரக்கல் வயிற்றில் கொண்ட இதுகளுக்கு கருப்புக் கட்டியில் இரண்டு அரிசி எடை கொடுக்கவும். மூன்று வேளை பத்தியம்.

இரச சுண்ணம்

இரசம் வராகனெடை 10 சட்டியில் போட்டு பொன்னாவரைஇலை சாறு படி 1/4 வெற்றிலை சாறு படிகால் இவ்விரண்டு சாறுகளும் கலந்து சட்டியை அடுப்பில் வைத்து சுருக்கு கொடுக்க சுண்ணமாகும்.

அப்பிரேக செந்தூரம்

..... கமலர்களை
